இலங்கை அணுசக்தி சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செலாற்றல் கூற்று, தேறி சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, பாதீடு செய்யப்பட்ட தரவுகள் மற்றும் உள்ளபடியான தரவுகள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை காட்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினை பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் இருக்குமாயின் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுனவத்தினால் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நிமயங்களுடனான இணக்கமின்மைகள்

	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்குரிய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (இ.பொ.து.க.நி) இலக்கம் 01 இன் 150(ஆ) பந்தியின் பிரகாரம்	2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் வரை ஒவ்வொரு ஆண்டும் நிறுவனத்தின்	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு

	நிதிக்கூற்றுக்களுடன் பிரசித்தப்படுத்தப்பட்ட தகவல்கள் வேறு இடத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லையாயின் சபையினால் சபையின் செயற்பாடுகளின் தன்மை மற்றும் அதன் பிரதான நடவடிக்கைகளின் விபரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்களில் அதன் பிரதான செயற்பாடுகளும் தன்மையும் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	செயற்பாடுகள் தொடர்பாக மற்றும் செயலாற்றல் செயல்முன்னேற்றம் தொடர்பாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வின் போது அரசாங்க கணக்காய்வு பிரிவினால் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க அந்த அறிக்கை நீக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டிலிருந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	காசுப் பாய்ச்சல் கூற்றுக்களுக்குரிய இ.பொ.து.க.நி இலக்கம் 02 இன் 08 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயற்பாடுகள் என்பது உரிமை மூலதனத்தில் மற்றும் கடன் பெற்றுக்கொள்ளும் அளவில் மற்றும் ஒதுக்கத்தின் மாற்றங்களிலான பெறுபேறுகளின் மூலமான செயற்பாடுகள் ஆனதுடன் அவ்வாறு நிதிச் செயற்பாடுகள் இல்லாத ஊழியர் கடன் அறவீடு செய்தல் ரூபா 4,135,210 நிதிச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டதன் காரணமாக அத்தொகையால் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் அதிகரித்தும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிலிருந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான சம்பவங்கள் தொடர்பான இ.பொ.து.க.நி இலக்கம் 06 இன் 24 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கற்றுக்களை வெளியிடுவதற்கு அங்கீகரித்த திகதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தும் அளவிற்கு முக்கியமான சம்பவங்கள் அறிக்கையிடல் திகதியின் பின்னர் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்குளக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	ஆதனம், பொறி மற்றும் உகபரணங்களுக்குரிய இ.பொ.து.க.நி இலக்கம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் தனிப்பட்ட பணம் சம்பந்தப்பட்ட சேவைகளை (Personal	TLD Cards மற்றும் Holders களை மதிப்பீடு செய்தல் தொடர்பாக 2025 கணக்காண்டின் போது	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க

	Monetarily Service/TLD Service) வழங்கும் போது வாடகைக்கு வழங்குவதற்காக பயன்படுத்துகின்ற 50 மாதங்கள் அளவிலான ஆக்கபூர்வமான ஆயுட்காலத்துடன் ரூபா 24.1 மில்லியன் பெறுமதியான வெப்ப வெளிவீச்சுடைய அட்டைகள் மற்றும் வைத்திருப்பவைகள் (TLD Cards & Holders) மற்றும் கெமா நிலையம் அமைந்துள்ள காணி அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் எச்சப் பெறுமதியும் பயன்தரும் ஆயுள் காலமும் ஆகக்குறைந்தது ஒவ்வொரு ஆண்டின் அறிக்கையிடல காலப்பகுதி முடிவடையும் திகதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்த போதிலும் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 60,296,240 கிரயமான விஞ்ஞான ரீதியான உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், ஏனைய உபகரணங்கள், அலுவலக பொருத்திகள், மனை உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், கணனிகள் ஆகிய சொத்துக்களின் மதிப்பீட்டுத் தவறினை இ.பொ.து.க.நி இலக்கம் 03 - கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழையான நியமங்களின் ஏற்பாடிற்கு இணங்க திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும். காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமை தொடர்பாக நிறுவன கணக்காய்வு குழுவினால் கவனம் செலுத்தி வருவதுடன் அதில் எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கணனி மற்றும் துணைக்கருவிகளை மீள்மதிப்புச் செய்யும் அறிக்கை தற்பொழுது நிறுவனத்தின் கணக்காய்வு குழுவின அறிவுறுத்தலின் அடிப்படையில் 2025/04/28 ஆந் திகதி உள்ளக குழுவினை நியமித்து அவர்களுக்கு 2025/08/31 ஆந் திகதிக்கு முன்னர் நடவடிக்கையை பூரணப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. (பின்னிணைப்பு இலக்கம் 04 இனை பார்க்கவும்)	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	இ.பொது.க.நி இலக்கம் 07 இன் 79 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 19,355,515 கிரயப் பெறுமதியான செயற்பாடற்ற 18 உபகரண விடய்ஙகளுக்கு சேத நட்டத்திற்கான ஏற்பாடு ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்கள் மற்றும் கை உறைகளை கிருமி நீக்கம் செய்து ஏற்றுமதியாளர்களுக்கு சேவை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள	செயற்படாத உகபரணங்களுக்காக சேத நட்டத்திற்கான ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் 2025 ஆம் ஆண்டிலிருந்து இது சம்பந்தமாக முழுமையாக இணங்கி நடக்கும். Cobalt 60 சொத்து சம்பந்தமாக பயன்தரும் ஆயுட்காலத்தினை நிதிக்	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிககை எடுத்தல் வேண்டும்.

	கெமா நிலையத்திற்காக பயன்படுத்துகின்ற ரூபா 448,920,949 கிரயமான கொபோல்ட் 60 மூலப் பொருட்களுக்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியானது அதன் பயன்பாட்டிற்கு இணங்க மாதாந்தம் அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்படும். எனினும் நியமத்தின் 86(ஆ) பந்தியின் பிரகாரம் அச்சொத்தினை பெறுமானத் தேய்வு செய்யும் நடைமுறை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நடைமுறை ஆண்டு தொடர்பாக அடையாளங்காணப்பட்ட பெறுமானத் தேய்வு ரூபா 10,875,018 ஆகும். அது கிரயத்தின் சதவீதமாக 2.42 சதவீதமாகும்.	கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததுடன் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இது சம்பந்தமாக முழுமையாக இணங்கி நடக்கப்படும்.	
(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19- ஊழியர் பிரதிபலன் நியமத்தின் 61 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் ஊழியர் பிரதிபலன் கடப்பாட்டினை கணிப்பீடு செய்யும் போது காப்பீட்டு முறைமை அதாவது நிறுவனத்தின் நிகழ்கால ஊழியர் கிரயம், ஊழியர் புரள்வு, பலவீனமடைதல் மற்றும் ஏற்கனவே ஓய்வுபெறும் விகிதம், மருத்துவ திட்டங்களின் கீழ் வேணடிக்கொள்ளுகின்ற விகிதம், மரணங்களின் எண்ணிக்கை ஊழியர்களின் ஆயுள் எதிர்பார்ப்பு ஓய்வுபெறும் வயது, கழிவு விகிதம் போன்ற கருதுகோல்களை ஈடுபடுத்தி வெளிப்படுத்தலுக்கு பிந்திய பிரதிபலன் திட்டக் கிரயம் மற்றும் ஒதுக்கீடு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் கணிப்பீடு செய்வதற்காக காப்பீட்டு முறைமை ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதில் 2025 ஏப்ரல் மாதம் உங்களால் வழங்கப்பட்ட காப்பீட்டு முறைமை கணிப்பீட்டிற்காக பயன்படுத்தப்படுகின்ற படிவம் 2025 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கணக்கீட்டு கொள்கை இலக்கம் 1.3 இற்கு இணங்க மோட்டார் வாகனங்களை தவிர்த்து ஏனைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கு வைப்பதற்காக கிரய மாதிரி பயன்படுத்தப்படுகின்றது என	நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கையானது மோட்டார் வாகனங்களைத் தவிர்த்து ஏனையவை மற்றும் உபகரணங்கள் கிரய மாதிரியை பயன்படுத்தி கணக்கீடு வைப்பதுவும்	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்குவைப்பதற்காக பயன்படுத்துகின்ற மாதிரி தெளிவாக வெளிப்படுத்தப்படுதல்

வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே கொள்கை இலக்கம் 1.3.1 இன் பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயம் அல்லது மீள்மதிப்பு பெறுமதியில் அறிக்கையிடப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதிகாரசபை அச்சொத்துக்களை அறிக்கையிடுகின்ற மாதிரி என்ன என்பது கணக்காய்வில் சிக்கலுடையதாகும்.	மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பு பெறுமதியில் அறிக்கையிடுவதுமாகும். இதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 1.3.1 இனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேண்டும்.

1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அபிப்பிராயம்		முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	அணு சக்தி சபைக்கு ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை மாலபே பிரதேசத்தில் 03 ஏக்கர் 36.5 பேச்சஸ் காணியை வழங்கியிருந்தது. அதற்காக திறைசேரியிடமிருந்து பெற்ற ரூபா 181 மில்லியன் பணம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இடம்பெற்ற பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்தி மேற்கூறிய காணியை தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவித்தல் அதிகாரசபைக்குச் சொந்தமான ஒருகொடவத்தையிலுள்ள 243 பேச்சர்ஸ் காணி சபைக்கு புரிந்துரணர்வு உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதன் போது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சபை செலுத்திய ரூபா 181 மில்லியன் பணம் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு வழங்கிய காணியின் மதிப்பீட்டு பெறுமதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்காரணத்தால் மேலே	1996 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஒருகொடவத்த பிரதேசத்திலுள்ள காணிகளுக்குரிய குத்தகை உடன்படிக்கையை முடிவு செய்ததன் காரணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை மீண்டும் மீண்டும் அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் காட்டப்பட்டிருந்தும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு உரிய நிறுவனத்திற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தியமை போல உரிய நிறுவனத்துடன் கூட்டங்களுக்கு பங்குபற்றி அது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது. எனினும் அப்பிரச்சினைக்கு தெளிவான ஒரு தீர்வு கிடைக்கவில்லை. அவ்வாறே புதிய கட்டிடம்	காணியின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	குறிப்பிட்ட ரூபா 181 மில்லியன் பணம் இன்னும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் காணியின் சட்டரீதியான உரிமையை சபையினால் பொறுப்பேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் உரிமை சம்பந்தமாக மற்றும் மாலபே காணியை பெற்றுக்கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டுள்ள ரூபா 181 மில்லியனை அறவீடு செய்தல் முதலிய நடவடிக்ககைள் சம்பந்தமாக சட்ட ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அரசாங்க நிறுவனங்களுக்கிடையே காணப்படுகின்ற உரிமைகள் சமர்ப்பிக்கப்படுகையில் 2018-05-11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது எனக் குறிப்பிட்டு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சு செயலாளர்களுடன் கலந்துரையாடி தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	
(ஆ)	2025 ஆம் ஆண்டில் 151 வவுச்சர்களின் மூலம் 2024 ஆம் ஆண்டிற்கான சேவைகள் மற்றும் பராமரிப்பதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 182,468 பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதி மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ஒரு செலவாகக் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அனைத்து செலுத்த வேண்டிய செலவுகளும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(இ)	2024 ஆம் ஆண்டிற்கான செலவுகளின் 05 வகைகளுக்காக ரூபா 2,069,972 குறைத்து நடைமுறை ஆண்டின் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

1.5.5 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
அணுசக்தி அதிகாரசபையினை இல்லாமல் செய்து சபையை ஸ்தாபிக்கும் போது நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 344,470,250 நிலையான சொத்துக்கள் மாற்றம் செய்யப்பட்டிருந்தும் பௌதீக பரீட்சிப்பிற்கு இணங்க மாற்றிய நிலையான சொத்துக்களின் அளவு ரூபா 323,368,373 மாத்திரமாகும். அதற்கிணங்க ரூபா 21,101,877 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அந்த வித்தியாசத்தினை தீர்த்துவைப்பதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அணுசக்தி அதிகாரசபையை ஒழித்து சபையை ஸ்தாபிக்கும் போது ரூபா 344 மில்லியனுக்கும் பௌதீகரீதியாக இருந்த ரூபா 323 மில்லியனுக்கும் இடைப்பட்ட ரூபா 21 மில்லியன் வித்தியாசத்தினை மாற்று நடைமுறைக்கு இணங்கும் வகையில் தகவல்களை வழங்குவதற்கு 31-03-2025 ஆந் திகதி நிறுவன ரீதியான கணக்காய்வு குழு 02 மாத காலத்தினை பிரதிப் பணிப்பாளருக்கு (நிதி) ஒப்படைத்துள்ளது. அக்கணிப்பீடு செய்தலும் தகவல்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பூரணப்படுத்தி மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்புதலும் செய்யப்பட்டுள்ளன.	வித்தியாசத்தை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறையற்ற சொத்துக்களில் ரூபா 31,850 ஆன பயன்படுத்தப்படாத பொருட்கள் மற்றும் ரூபா 397,758 ஆன பயன்படுத்தப்படாத ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக	ரூபா 397,758 ஆன பயன்படுத்தப்படாத பொருட்களுக்கான பட்டோலை பின்னிணைப்பு 08 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இப்பொருட்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை	இருப்பு பட்டோலையும் இருப்பு மீளாய்வு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் இவற்றில் ரூபா 397,758 ஆன பயன்படுத்தப்படாத ஆய்வுகூட இரசாயனப் பொருட்களுக்காக அந்த முழுப் பெறுமதிக்கும் சேத நட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த மீதியை அடையாளங்காண்பதற்காக இருப்பு பட்டோலை, இருப்பு மீளாய்வு அறிக்கை முதலிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்படவில்லை.	இந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்படும் (பின்னிணைப்பு இலக்கம் 08 இனைப் பார்க்கவும்)	
(ஆ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 449,344,289 மொத்த தொகையான அழிவடையாத பரீட்சிப்பு தேசிய நிலையத்திலுள்ள கொபோல்ட் 60 மூலப்பொருட்கள், கதிர்வீச்சு வசதிகள் முதலிய நிலையான சொத்துக்களின் 02 தொகுதிகளுக்குரிய விபரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அச்சொத்துக்களின் கிரயம், வருடாந்த பெறுமானத் தேய்வு, கொள்வனவுகள் முதலிய தகவல்களை கணக்காய்வின் போது திருப்தியாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.	உரிய நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை பின்னிணைப்பு 09 இன் மூலம் சமர்ப்பிக்கிறேன். (பின்னிணைப்பு இலக்கம் 09 இனை பார்க்கவும்)	சொத்துக்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 175,769,436 பெறுமதியான பொறி மற்றும் உபகரண மீதியிலுள்ள ஒவ்வொரு விடயத்தினதும் சொத்துக்களை கொள்வனவு செய்தல் தொடர்பான விபரத்தினை உள்ளடக்கி பெறுமானத் தேய்வினை கணிப்பீடு செய்வதற்குரிய பட்டோலை கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை இதன் காரணமாக அச் சொத்துக்களின் பெறுமதி, ஆண்டிற்கான பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 11,744,884 மற்றும் பெறுமானத்தேய்வுக்கான ஒதுக்கம் ரூபா 110,466,269 என்பவற்றின் சரியானதன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது	2024 ஆம் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு அளவானது நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் ஒவ்வொரு சொத்துக்களுக்குமான பட்டோலையில் காட்டப்பட்டுள்ளது	தரவுகளையும் தகவல்களையும் முழுமையாக உள்ளடக்கி நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை கணக்காய்விற்குச் சமர்பித்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 63,597,613 வணிகக் கடன்பட்டோர் மீதி காணப்பட்டதுடன் அந்த மீதியில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட மற்றும் 03 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 12,304,412 கடன்பட்டோர் மீதியும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 05 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 1,815,133 கடன்பட்டோர் மீதியும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,188,220 கடன்பட்டோர் மீதியும் காணப்பட்டது. இந்த நீண்ட காலமாக நிலுவையாக இருந்த மீதியினை அறவீடு செய்வதற்கு சபை போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025-04-30 ஆந் திகதி வரை 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியான ரூபா 63.597 மில்லியன் பெறுமதியில் 42% அளவான ரூபா 26.71 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளது. 2025-04-30 ஆந் திகதி வரை காணப்பட்ட ரூபா 36.8 மில்லியன் பெறுமதியும் விபரமாக இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு இலக்கம் 07 இனை பார்க்கவும்)	நிலுவையாக உள்ள மீதியை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 4,895,942 ஏனைய கடன்பட்டோர் மீதியில் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட மொத்தமாக ரூபா 277,172 ஆன 08 கடன்பட்டோர் மீதிகள் காணப்பட்டதுடன் அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் பதவியினர் கடன்பட்டோர் ரூபா 362,209 காணப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 92,750 ஆன RAS 07/30 ஆம் இலக்க பதவியினர் கடன்பட்டோர் மீதியானது 05	2025 ஆம் ஆண்டின் போது இப்பெறுமதிகளை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.	நிலுவையாக உள்ள மீதிகளை அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஆண்டுகள் பழமையானதுடன் இக்கடன்பட்டோரில் கடன் அறவீடு செய்யப்படாமை ஆபத்துடனான கடன்பட்டோர் மீதியை அடையாளங்கண்டு அதற்காக அறவிட முடியாக்கடன் நட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(இ)	காலாண்டிற்கு ஒரு தடவை சுய மதிப்பீட்டின் அடிப்படையில் வருமான வரியினை செலுத்தும் போது சபையினால் வரிப் பொறுப்பினை மிகைத்து வரி லுெத்தியதன் காரணமாக ரூபா 1,031,961 வரிச் சொத்து 2018 ஆம் ஆண்டிலிருந்து உருவாகியிருந்ததுடன் உரிய சட்டப்படியான காலத்தினுள் அந்த மிகைக் கொடுப்பனவுகள் எதிரீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விசாரித்து மீதியினைத் தீர்த்துவைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விசாரித்து இந்த மீதியை தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விசாரித்து மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 ரதிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 207,317,483 ஆன ஏனைய நடைமுறைச் சொத்து மீதியில் 06 ஆண்டுகள் பழைமையான ரூபா 3,248,395 கிடைக்க வேண்டிய வெட் வரி மீதியும் ரூபா 863,562 ஆன கிடைக்க வேண்டிய பொருளாதார அபிவிருத்தி கட்டண மீதியும் ரூபா 587,285 ஆன பெறவேண்டிய நிறுத்திவைத்தல் வரி மீதியும் காணப்பட்டதுடன் அந்த பெறவேண்டிய வரி மீதியினை வரி செலுத்தும் போது எதிரீடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ரூபா 207,317,483 ஆன ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் மீதியில் உள்ள 06 ஆண்டுகள் பழமையான ரூபா 4,699,242 ஆன கடன்பட்டோர் மீதிக்கு மத்தியில் ரூபா 3,248,395 ஆன கடன்பட்டோர் மீதியானது அழிக்கப்படாத பரீட்சிப்பு தேசிய நிலையத்தின் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய இறுதி விலைப்பட்டியலில் குறிப்பிட்ட வெட் வரிப் பணமாகும். இந்த விலைப்பட்டியலை செலுத்துவது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை இந்த மீதியினை தீர்த்துவைக்க முடியாது . மீதிகளை தீர்த்துவைப்பதற்கு முடியுமான அளவு விரைவாக தேவையான நடவடிக்கை	நிலுவையாக உள்ள மீதிகளை அறவீடு செய்வதற்கு போதிய அளவு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எடுக்கப்படும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	**இணக்கமின்மை**	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாணங்கள் 570 மற்றும் 571	செயற்திட்டங்களை பூர்த்திசெய்த திகதியிலிருந்து 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 04 மில்லியன் நிறுத்திவைத்தல் பணத்தின் 03 மீதிகளை மீளத்தீர்த்து வைக்கும் பொறுப்பு தொடர்பாக மதிப்பீடு செய்து சபையின் வருமானத்திற்கு செலவுவைத்தல் அல்லது தீர்த்துவைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	SLRDC இற்கு செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் இன்னும் நிறுத்திவைக்கப்பட வேண்டியுள்ளதுடன் ஏனைய நிறுத்திவைத்தல் பணங்களை தீர்த்துவைப்பதற்கு இந்த ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 அந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவை			
	(i) 1 ஆம் பந்தி	சபையினால் தந்திரோபாயத் திட்டத்திற்கு இணங்க முன் அறியப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தொகுதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	நாளதுவரையாக்கிய தந்திரோபாயத் திட்டம் தயாரித்த உடன் அதற்கு நேரொத்த முன் அறியப்பட்ட நிதிக்கூற்றுக்கள்	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ல.	தயாரிக்கப்படும்.	
(ii)	3.2 ஆம் பந்தி	நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்கள் கடப்பதற்கு முன்னரும் ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னரும் வருடாந்த செயலாற்றல் மீளாய்வுக் கூட்டம் (APRM) நடாத்தப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2022 மற்றும் 2023 ஆம் நிதி ஆண்டுகளுக்கான அக்கூட்டங்கள் இன்றுவரை நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டின் போது ஈடுபடுத்தப்பட்டிருந்த APRM கூட்டம் 2024-10-07 ஆந் திகதிய PS/PSG/P-SEC/2024-01 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தில் பணிப்பாளர் சபை கூட்டங்களை நிறுத்துவதற்கான அறிவுறுத்தலின் அடிப்படையில் நடாத்துவதற்கு முடியாதிருந்ததுடன் அதனை உடனடியாக நடாத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான்டு செயற்பாட்டு விளைவுகள் ரூபா 45.5 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 74.5 மில்லியனாகும். அதற்கிணங்க் நிதி விளைவுகளில் ரூபா 120 மில்லியன் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது அன்பளிப்புக்கள் ரூபா 13.2 மில்லியனாலும் கெமா நிலையத்தின் அணுமின் சேவை வருமானம் ரூபா 25.5 மில்லியனாலும் வெல்டிங் தகமைகளை வழங்கும் வசதிகள வருமானம் ரூபா 24.4 மில்லியனாலும் குறைவடைதல் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகள் ரூபா 8.3 மில்லியனால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களுக்குரிய போக்குப் பகுப்பாய்வு

வருமானம் / செலவு விடயம்	2024	2023	முரண்	முரணின் சதவீதம்
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	%
கதிர்வீச்சு சேவை வருமானம் கெமா நிலையம்	45.4	70.9	(25.5)	36
உணவுகளை பரீட்சித்தல் வருமானம்	57.4	64.1	(6.7)	10.4
NDT பயிற்சி கற்கைநெறி	2.1	5.6	(3.5)	62.5
IRMS பயிற்சி கற்கை நெறி	0.5	6.2	(5.7)	92
வெல்டிங் வசதிகளை வழங்கும் கற்கைநெறி வருமானம்	4.1	28.5	(24.4)	86
NCNDT இன் சம்பள செலவுகள்	18.5	28.3	9.8	34.6

வாழ்க்கைச் செலவுப் படிகள்	16.3	7.9	8.4	106.3
மோட்டார் வாகன திருத்தம்	5.0	1.9	3.1	163

2.3 விகிதாசார பகுப்பாய்வு

விகிதம்	**2024**	**2023**	**2022**	**2021**	**2020**
உரிமை மூலதனத்தின் அடிப்படையிலான பிரதிபலன் விகிதம்	(1.75)	2.79	0.77	4.92	8.66
முழுசொத்துக்கள் பிரதிபலன் விகிதம்	(1.65)	2.62	(0.72)	4.64	4.78
நடைமுறைச் சொத்துக்கள் விகிதம்	3.17	2.65	2.34	2.67	4.49
தேறிய மிகை விகிதம்	(22.09)	28.83	(10.19)	73.29	2.74

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	தொழில் முயற்சி வளங்களை திட்டமிடல் முறைமையினை (ERP) உருவாக்குதல், அபிவிருத்தி செய்தல், அமுல்ப்படுத்துதல் உபசரித்தல் மற்றும் பராமரிப்பதற்கான பெறுகைகளின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.1(ஈ) பிரவின் பிரகாரம் போதியளவு நிதி எற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாது 2021 ஆம் ஆண்டின் போது பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு வழிகாட்டிக் கோவையின் 2.8.4(ஈ) பிரிவின் பிரகாரம் வெளி பெறுகை விடயம் தொடர்பான அறிவு உள்ள ஒரு அங்கத்தவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 மார்ச் மாதம் ரூபா 6.87 மில்லியனுக்குரிய செயற்பாடுகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்துதுடன் 2023 மே மாதமளவில் ஒப்பந்த பணத்தில் ரூபா 2.43 மில்லியன் (35 சதவீதம்) செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் 2023 திசெம்பர் 16 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் உரிய செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை.	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை நியமித்தலானது பெறுகை வழிகாட்டிக கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை என குறிப்பிடுகிறேன். எனினும் மென்பொருள் தொடர்பான அறிவினைக் கொண்டுள்ளார் என அடையாளங்காணப்பட்டுள்ள அங்கத்தவர்களும் நிதி மற்றும் பெறுகை சம்பந்தமான விடய அறிவினைக் கொண்டுள்ளவர்களையும் உள்ளடக்கும் வகையில் அந்த நியமனங்கள் வழங்கப்பட்டன. விடய அறிவினைக் கொண்ட வெளி நிறுவன உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் மதிப்பீட்டு குழுவினை நியமிக்கும் போது பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன்.	உரிய செயற்பாட்டினை முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	வெல்டிங் நுட்ப வியலாளர் தகமை வழங்கும் சான்றிதழ் பத்திர கற்கை நெறியின் மூலம் 2023 ஆம் ஆண்டின் போது சபை ரூபா 28 மில்லியன் வருமானத்தை உழைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது ரூபா 4.1 மில்லியனாக இருந்ததன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 23.9 மில்லியனால் வருமானம் குறைவடைந்திருந்தது. அது சதவீதமாக 85 சதவீதம் குறைவாகும். உள்ளக வெல்டிங் பிரிவின் மூலம் உரிய கற்கைநெறி 2022 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்டிருந்ததுடன் 2023 யூலை மாதத்தின் போது இந்த கற்கைநெறியை மேற்கொள்வதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் உடன்படிககை செய்யப்பட்டிருந்தது.	சர்வதேச நியமத்திற்கு இணங்க அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் தகமைபெற்ற வெல்டிங் தொழில்நுட்பவியலாளர்களுக்கு எங்களால் வழங்கப்படுகின்ற WPQ சான்றிதழ்களுக்காக எங்களக்கு அதிக வேண்டுதல் கிடைப்பதற்கு பிரதான காரணமாகும். SLAEB இற்கு கிடைக்கின்ற அந்த புகழ்சியானது தேசிய மற்றும் சர்வதேச வெல்டிங் சமூகத்திற்கு மத்தியில் இன்னும் காணப்படுகின்றது. மேலும் 2023 ஆம் ஆண்டின் போது WPQ இற்கு காணப்படுகின்ற வழக்கத்திற்கு மாறான வேண்டுதல்களுக்கு காரணமாக இருந்ததானது அக்காலத்தில் வெல்டிங் தொழில்நுட்பவியலாளர்களுக்கு கொரிய கப்பல் கம்பனிகளில் காணப்பட்ட அதிக வேண்டுதல்களகும். எனினும் 2024 ஆம் ஆண்டின் போது எங’களால் கட்டுப்படுத்த முடியாத விட்ங்களின் அடிப்படையில் அதற்கான வேண்டுதல் அதிக அளவில் குறைவடைந்திருந்தது.	வருமானங்களை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	அழிவில்லாத தேசிய நிலைய கட்டிடத்தின் முழுக்கிரய மதிப்பீடு ரூபா 308,653,543 ஆனதுடன் 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்திற்காக செலவு செய்யப்பட்ட முழுக் கிரயம் ரூபா 428,981,984 ஆகும். அதற்கிணங்க முழுக்கிரய மதிப்பீட்டினை மிகைத்து ரூபா 120,328,441 செலவு செய்யப்பட்டிருந்தும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை	இந்த விலை முரணான அங்கீகரித்துக் கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரம் தற்பொழுது வரிசை அமைச்சின் மூலம் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.	முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	2015 ஆம் ஆண்டின் போது அழிக்கப்படாத பரிசோதனை தேசிய நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ரூபா 8.2 மில்லியன் பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதத்திலிருந்து செயற்படாதிருந்தது. தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைத்த இந்த திருத்த வேலைகளுக்குரிய பெறுகைக் கோவை 08 மாதஙகள் காணாமல் போயிருந்ததன் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2025 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் அதுதிருத்தம் செயயப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	இந்த இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்காக 2025 ஆம் ஆண்டின போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கோவைகளை ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றலினை தற்பொழுது முறையான நடைமுறையின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	கொங்கிரீட்களை பரீட்சிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1.66 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொங்கிரீட் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளும் உபகரணம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து இன்றுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அமைச்சு கணக்காய்வு மற்றும் முகாமைத:துவ குழுவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க இதனை பயன்படுத்தக்கூடிய ஏனைய அரசாங்க நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் பணம் செலுத்ததாது பொறுப்பேற்பதற்கு இணங்கிக் கொண்டிருந்த போதிலும் எதிர்வரும் காலங்களில் எங்களுக்கு சேவை தேவைப்பாடுமாயின் அதனை இலவசமாக செய்து தருவதற்கு இணங்கி கொள்ளாததன் அடிப்படையில் முறையான தீர்மானம் எடுப்பதனை முன்னிட்டு 2025 யூன் மாதம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	இந்த உபகரணத்தை எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் ஆண்டின் போது ரூபா 22.9 மில்லியன்	இப்பெறுகையை இதுவரை நிறைவேற்றுவதற்கு	தேவையான துணைக்கருவிகளை

	செலவு செய்து இலங்கை தேயிலை செயற்திட்டத்தின் மாதிரிகளையும் ஏனைய மாதிரிகளையும் பரீட்சிக்கும் நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களுடன் கொள்வனவு செய்யப்பட வேண்டிய கையடக்க தொலைபேசி மற்றும் கேஸ்சிலின்டர் வழங்கப்படாதிருந்ததனால் இன்றுவரை எந்த மாதிரியும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.	முடியாதிருந்ததன் காரணமாக மற்றும் தற்பொழுது 2025 மூலதன பாதீட்டிற்கு உள்ளடக்கப்பட்ட இந்த விடயம் பெறுகை நடைமுறையின் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையானது திணைக்கள பெறுகைக்குழுவின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் அரசாங்க மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் அரசாங்க கணக்காய்வாளர்களுக்கு 2025-05-19 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. விபரமான அறிக்கை 2025-05-19 ஆந் திகதி SLAEB/2025/02 ஆம் இலக்கத்தோடு தற்பொழுது அரசாங்க கணக்காய்வாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	கொள்வனவு செய்து மாதிரிகளை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2019 ஆம் ஆண்டில் உயிரியல் விஞ்ஞான ஆய்வுகூடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ரூபா 23 மில்லியன் பெறுமதியான உபகரணங்களுக்கான சேவை உடன்படிககை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் உபகரணங்கள் சம்பந்தமான கிரயப் பதிபலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணம் 2021 ஆம் ஆண்டில் செயற்பாடற்று திருத்தம் செய்ததன் பின்னர் 2022 ஆம் ஆண்டில் மீண்டும் செயற்படாதிருந்ததுடன் இன்றுவரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.	இதற்குரிய பதிலானது அதில் குறிப்பிட்ட 2.2.4(அ)(iii) இன் பதிலுடன் தொடர்புபட்டதாகும். இப்பெறுகையை இதுவரை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் காரணமாக மற்றும் தற்பொழுது 2025 மூலதன பாதீட்டிற்கு உள்ளடக்கப்பட்ட இந்த விடயம் பெறுகை நடைமுறையின் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையானது திணைக்கள பெறுகைக்குழுவின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் அரசாங்க மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் அரசாங்க கணக்காய்வாளர்களுக்கு 2025-05-19 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. விபரமான அறிக்கை 2025-05-19 ஆந் திகதி SLAEB/2025/02 ஆம் இலக்கத்தோடு தற்பொழுது அரசாங்க கணக்காய்வாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	உபகரணங்களை திருத்தம் செய்து மீண்டும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலைகளின் கீழ் 05 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 3,414,568 ஆன புதிய கட்டிட நிர்மாண செயற்திட்டம் முறையாக ஆய்வு செய்யப்படாதும் கவனயீனமாகவும் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை முடிவு செய்யாதிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்ற செலவாக மாறியிருந்தது.	நடைமுறை வேலைகளுக்கு மத்தியில் தற்பொழுது நீக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் • நடைமுறை வேலைகளுக்கு மத்தியில் Procudure Manual for AEB, Development of Project Web மற்றும் Cyclotron project ஆகிய செயற்திட்டங்கள் தற்பொழுது முடிவடைந்துள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் நடைமுறை வேலைகளுக்கு மத்தியில் பின்வருமாறு தகவல்கள் தொடர்புபட்டதாகும். New Building, NAITA - இதில் குறிப்பிட்ட 1.2.4(அ) பதிலின் அடிப்படையில் காணப்பட்டது.	செயற்பாடுகளை முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (இ) பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க கணக்காய்வுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2.(அ) பிரிவின் பிரகாரம் பெறுகை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்திலிருந்து முடிவடையும் வரை ஒவ்வொரு பெறுகை நடவடிக்கையையும் முறைப்பப்படியாக	அரசாங்க கணக்காய்வுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

விபரிக்கின்ற பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் ரூபா 72.29 மில்லியன் பெறுமதியான 43 பிரதான பெறுகைகளுக்காக பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2024 பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 49. 5 மில்லியன் பெறுமதியான 18 பெறுகைகள் 2024 திசெமபர் 31 ஆந் திகதி வரை சபையினால் மேற்கொள்ளப்படுவதனை ஆரம்பித்தல் அல்லது ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள ரூபா 6.75 மில்லியனான 03 பெறுகை நடவடிக்கைகளில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் குறிப்பிடத்தக்க அளவு செயல்முன்னேற்றம் அவதானிக்கபபடவில்லை.		

3.5 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அபிப்பிராயம்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
சபையினால் ரூபா 1.378 மில்லியன் (வரியில்லாது) செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த 08 கதிர்வீச்சு அளவீட்டு உபகரணங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு உதவியாக கிடைத்த யூரோ 8,995 பெறுமதியான இன்னுமொரு கதிர்வீச்சு அளவீட்டு உபகரணம் 2019 ஆம் ஆண்டின் போது தற்காலிக அடிப்படையில் இலங்கை விமானப் படையின் CBRNE பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தும் 2025 மே 02 ஆந் திகதி வரையும் அந்த உபகரணங்கள் சபைக்கு	இன்றுவரை (2025-05-08 ஆந் திகதி) இலங்கை விமானப் படையினால் இந்த இரண்டு விடயங்கள் சம்பந்தமாக சாதகமான பதில் எங்களுக்கு கிடைத்துள்ளது. (பின்னிணைப்பு இலக்கம் 11/12 இனை பார்க்கவும்)	உரிய உபகரணங்கள் சபைக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கிடைத்திருக்காததுடன் அதன் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.6 மனிதவளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த ஆளணி 185 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்டங்களின் வெற்றிடம் 57 ஆகவும் ஆரம்ப மட்டத்தின் வெற்றிடம் 08 ஆகவும் சபையின் ஒட்டுமொத்த வெற்றிடம் 65 ஆகவும் காணப்பட்டதுடன் இது 35 சதவீதம் ஆன உயர்ந்த அளவில் இருந்ததன் காரணமாக வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டினை அமுல்ப்படுத்துவதன் மூலம் அதிகாரச்சட்டத்தின் குறிக்கோள்களை எதிர்பார்த்த வகையில் அமல்ப்படுத்துதலானது சவாலுக்குரியதாக இருந்தது.	நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அது வரை பெயரிடப்பட்டிருக்காததன் அடிப்படையில் இன்னும் ஆட்சேர்க்கும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது எனவும் பணிப்பாளர் சபையை மீண்டும் பெயரிடுகையில் ஆட்சேர்ப்பதற்கு கோரப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள் 06 மாதங்களை மிகைத்திருந்தன. அவ்போதளவில் புதிதாக தகமைகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களும் இருப்பதனால் மீண்டும் விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கிணங்க 2025-03-10 ஆந் திகதி மீண்டும் மூன்று மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன் அதற்கிணங்க விண்ணப்ப பத்திரங்கள் குறுகிய பட்டியல்படுத்தப்பட்டு விரைவாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது.	சபையின் பிரதான செயற்பாடுகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 ஆண்டறிக்கை

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு ஆண்டறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில்	2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கை அமைசசினால் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை சரிசெய்து தற்பொழுது அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை துரிதமாக பூரணப்படுத்துவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	ஆண்டறிக்கையை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நவடிக்கை எடுத்தல் வேண்டும்.

முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்வில்லை.

4.2 கணக்காய்வுக் குழு

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்க தொழில்முயற்சிகளுககான வழிகாட்டிக் கோவையின் பின்னிணைப்பு iv இன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் சிபாரிசுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் சிபாரிசினை பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டதன் பின்னர் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது. 2025-02-19 ஆந் திகதியாகும். 2025-02-28 ஆந் திகதி கணக்குகளைச் சமர்ப்பிக்கும் இறுதிக்கால எல்லைத் திகதியை நிறைவேற்றும் தீவிர தேவைப்பாட்டின் அடிப்படையில் 2025-02-26 ஆந் திகதி விசேட பணிப்பாளர் சபைக் கூட்டத்தினைக் கோரி 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன. முதலாவது கணக்காய்வுக் குழு உத்தியோகபூர்வ ரீதியாக 2025-02-28 ஆந் திகதியின் பின்னரே நியமிக்கப்பட்டது. அதாவது 2025-03-31 ஆந் திகதி முதலாவது கணக்காய்வு குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது. அதுவரை 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தாமதிக்கப்படும் என்ற பிரச்சினை எங்களுடையதாக இருந்தது. 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தாமதிக்காது இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் நேரடியாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.	நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 ஆம் ஆண்டிற்கான பாதீடு முறைப்படியாக முன் அறியப்படாததன் காரணமாக 16 செலவு விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட செலவு ரூபா 30,360,000 மற்றும் உள்ளபடியான செலவு ரூபா 24,265,000 ஆகும். அதற்கிணங்க மேற்கூறிய 16 செலவு விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட செலவிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 25 சதவீதத்திலிருந்து 137 சதவீதம் வரையான வீச்சுக்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க பாதீடானது ஆக்கபூர்வமான செலவுக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் 53 வரிசை உருப்படிகளில் 15 உருப்படிகள் மாத்திரம் + மற்றும் - ஆக முரண்களை கொண்டிருந்தது.	பாதீட்டினை கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தி முரண்களை குறைத்தல் வேண்டும்.